## May 22, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. உக்ரைன் போர் 4 ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில், ரஷியா தனது அண்டை நாடான பெலாரஸுடன் இணைந்து தரை, கடல் மற்றும் வான்வழியாக கூட்டு அணு ஆயுதப் பயிற்சி மேற்கொண்டது.

(i) மாஸ்கோ புறநகரில் உக்ரைன் அண்மையில் நடத்திய ட்ரோன் தாக்குதல்களில் மூவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து, இந்த 3 நாள்கள் பயிற்சி தொடங்கப்பட்டது.

(ii) ஆக்கிரமிப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில் அணுஆயுதப் படைகளைத் தயார்படுத்துவதை நோக்கம் கொண்ட இப்பயிற்சியில் 64,000 ராணுவ வீரர்கள், 200-க்கும் மேற்பட்ட ஏவுகணை ஏவுதளங்கள், 140 போர் விமானங்கள், 73 போர்க் கப்பல்கள், 13 நீர்மூழ்கிக் கப்பல்கள் ஈடுபடுத்தப்பட்டன.

(iii) ரஷிய அதிபர் புதின் கடந்த 2024-இல் கொண்டுவந்த திருத்தப்பட்ட அணுஆயுதக் கொள்கையின்படி, அணுஆயுத நாடொன்றின் ஆதரவோடு எந்த நாடும் ரஷியாவைத் தாக்கினால், அது கூட்டுத்தாக் குதலாகவே கருதப்படும். இந்த அணு ஆயுதப் பாதுகாப்பின்கீழ் பெலாரஸையும் இணைத்துள்ள ரஷியா, அங்கு தனது அதிநவீன ஏவுகணைகளை நிலைநிறுத்தியுள்ளது.

2. உள்நாட்டுப் போர் நடைபெறும் மியான்மரில், மற்றும் தாய்லாந்து எல்லைகளையொட்டிய 2 முக்கிய நகரங்களை கிளர்ச்சியாளர்களிடமிருந்து ராணுவம் மீட்டுள்ளது.

(i) இந்திய எல்லைக்கு அருகே வடமேற்கு சின் மாநிலத்தில் உள்ள டோன்சாங் நகரம், 10 நாள்கள் தொடர் ராணுவ நடவடிக்கைக்குப் பிறகு மீட்கப்பட்டது. இதே போல், தாய்லாந்து உடனான வர்த்தகத்துக்கு முக்கியத்துவமான தெற்கு தனின்தார்யி பிராந்தியத்தில் உள்ள மாவ்டௌங் நகரை 2 வாரகால போராட்டத்துக்குப் பிறகு ராணுவம் தன் வசமாக்கியுள்ளது.

(ii) சீன மத்தியஸ்தத்திலான சண்டை நிறுத்தம் மற்றும் கட்டாய ராணுவச் சேர்க்கை மூலம் அதிகரித்துள்ள படை பலத்தால், கடந்த ஆண்டின் மத்தியில் இருந்து இந்த உள்நாட்டுப் போரில் ராணுவத்தின் கை ஓங்கி வருகிறது.

3. நேபாளத்தில் இருந்து உலகின் மிக உயர்ந்த எவரெஸ்ட் சிகரத்தை ஒரே நாளில் 3 இந்தியர்கள் உள்பட 274 மலையேற்ற வீரர்கள் வெற்றிகரமாக அடைந்து புதிய உலக சாதனை படைத்துள்ளனர்.

(i) இதற்கு முன்பு கடந்த 2019, மே மாதத்தில் ஒரே நாளில் 223 பேர் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்ததே சாதனையாக இருந்தது. தற்போதைய சீசனில் எவரெஸ்ட் சிகரத்தை ஏற மொத்தம் 502 மலையேற்ற வீரர்களுக்கு நேபாள அரசு அனுமதி வழங்கியிருந்த நிலையில், கடந்த புதன்கிழமை நிகழ்த்தப்பட்ட வரலாற்றுச் சாதனையில் 150 நேபாள 'ஷெர்பா' பழங்குடியினர் உள்பட 274 பேர் சிகரத்தின் உச்சியை அடைந்தனர்.

(ii) இக்குழுவில் தெலங்கானாவின் துளசி ரெட்டி பால்புனூரி, சந்தீப் அரே, அஜய் பால் சிங் தாலிவால் ஆகிய 3 இந்தியர்களும் இடம் பெற்றுள்ளனர். வியாழக்கிழமையன்று, இந்தியாவின் லட்சுமிகாந்தா மண்டல் உள்ளிட்ட மேலும் 8 பேரும் சிகரத்தை அடைந்தனர்.

(iii) இந்த சீசனில் மேலும் சில உலக சாதனைகளும் படைக்கப்பட்டுள்ளன. நேபாளத்தைச் சேர்ந்த காமி ரீடா ஷெர்பா, எவரெஸ்ட் சிகரத்தை 32-ஆவது முறையாக ஏறிதனது சொந்த சாதனையைத் தானே முறியடித்துள்ளார். இதேபோல், நேபாளத்தைச் சேர்ந்த லக்பா ஷெர்பா, எவரெஸ்ட் சிகரத்தை 11 முறை ஏறிய முதல் பெண்மணி என்ற புதிய சாதனையைப் படைத்துள்ளார்.

(iv) தெலங்கானா இளைஞரின் உத்வேக பயணம்:

- எவரெஸ்ட் சிகரத்தை அடைந்துள்ள தெலங்கானா இளைஞர் துளசி ரெட்டி, தொடக்கத்தில் வெறும் உடல் எடையைக் குறைப்பதற்காக உடற்பயிற்சிக் கூடத்துக்குச் செல்லத் தொடங்கியுள்ளார். பின்னர், அதுவே மலையேற்றத்தின் மீதான ஆர்வமாக மாறியுள்ளது.
- எல்ப்ரஸ், கிளிமஞ்சாரோ உள்பட பல சிகரங்களை ஏற்கெனவே ஏறியுள்ள இவர், 'பல ஆண்டுகால ஒழுக்கம், தியாகம் மற்றும் தொடர் பயிற்சியின் விளைவே இந்த வெற்றி' என நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

4. இந்திய நிறுவனங்களின் வெளிநாட்டு முதலீடு, கடந்த ஏப்ரலில் அதற்கு முந்தைய மாதத்தைக் காட்டிலும் இருமடங்காக அதிகரித்து, 336.9 கோடி டாலரை எட்டியுள்ளது.

(i) புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் இந்திய ரூபாயின் மதிப்பு சரிந்து வரும் நிலையிலும் இந்த அசுர வளர்ச்சி எட்டப்பட்டுள்ளது.

(ii) 'கோஃபோர்ஜ்' தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் பிரம்மாண்ட முதலீடே இந்த உயர்வுக்கு முக்கியக் காரணம் என ரிசர்வ் வங்கியின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இந்திய நிறுவனங்களால் வெளிநாட்டுப் பங்குகளில் ஏப்ரல் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட மொத்த முதலீட்டில் சுமார் 86 சதவீதத்தை முன்னணியில் உள்ள 5 நிறுவனங்களே ஆக்கிரமித்துள்ளன.

(iii) இதில் 'கோஃபோர்ஜ்' நிறுவனம் முறையே 137.1 கோடி டாலர், 99.4 கோடி டாலர் என 2 பெரிய முதலீடுகளைச் செய்து பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

(iv) இதையடுத்து, லுபின் மருந்து தயாரிப்பு நிறுவனம் 22.9 கோடி டாலரையும், விங்கிஃபை சாஃப்ட்வேர் 15.68 கோடி டாலரையும், கினாக் குளோபல் 8.3 கோடி டாலரையும், கிளார் டெக்னாலஜி 5.4 கோடி டாலரையும் வெளிநாடுகளில் முதலீடு செய்துள்ளன.

(v) இதேபோல், கடன்கள் மற்றும் உத்திரவாதங்கள் உள்ளிட்ட இந்தியாவின் மொத்த நிதிப் பொறுப்புரிமை, கடந்த மார்ச் மாதத்தின் 508.5 கோடி டாலரிலிருந்து, ஏப்ரலில் 11 சதவீத வளர்ச்சியுடன் 564.4. கோடி டாலராக அதிகரித்துள்ளது.

5. சீனியர் ஃபெடரேஷன் கோப்பை தடகளப் போட்டி ராஞ்சியில் வெள்ளிக்கிழமை (மே 22) தொடங்குகிறது. பிறப்பு ரீதியாக பெண்களாக இருப்பவர்கள் மட்டுமே மகளிர் பிரிவில் பங்கேற்பதை உறுதி செய்யும் 'எஸ்ஆர்ஓய்' பரிசோதனை நடை முறை இதில் அறிமுகம் செய்யப்படுகிறது.

6.2028 லாஸ் ஏஞ்சலீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு இந்திய காம்பவுண்ட் வில்வித்தை போட்டியாளர்கள் தயாராகும் வகையில், பலமுறை உலக சாம்பியனான அமெரிக்காவின் டேவ் கசின்ஸ் அவர்களுக்கான பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

7. ஐந்து நாடுகள் அரசுமுறைப் பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்த பிரதமர் நரேந்திர மோடி வியாழக்கிழமை நாடு திரும்பினார். அவரது இந்தப் பயணத்தின்போது, எரிசக்தி, பாதுகாப்பு, முக்கியக் கனிமங்கள் உள்ளிட்ட துறைகளில் முக்கிய ஒப்பந்தங்கள் கையொப்பமாகின. பிரதமர் மோடிக்கு மூன்று உயரிய விருதுகளும் வழங்கப்பட்டன.

(i) வளைகுடா நாடான ஐக்கிய அரபு அமீரகம், ஐரோப்பிய நாடுகளான நெதர்லாந்து, ஸ்வீடன், நார்வே, இத்தாலி ஆகிய ஐந்து நாடுகளுக்கு 6 நாள்கள் அரசுமுறைப் பயணத்தை பிரதமர் மோடி கடந்த மே 15- ஆம் தேதி தொடங்கினார்.

(ii) ஐக்கிய அரபு அமீரகம்:

- முதல் கட்டமாக ஐக்கிய அரபு அமீரகத்துக்கு பயணமான அவர், அந்நாட்டின் அதிபர் ஷேக் முகமது பின் சையத் அல் நஹ்யானுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டார்.
- அமெரிக்கா-இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே கடந்த பிப்ரவரியில் போர் மூண்ட பிறகு மேற்காசிய பிராந்தியத்துக்கு பிரதமர் மோடி மேற்கொண்ட முதல் பயணம் இதுவாகும். ஹோர்முஸ் நீரிணை முடக்கத்தால் கச்சா எண்ணெய் ஏற்றுமதி தடைபட்டு, இந்தியா உள்பட பல்வேறு நாடுகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், பிரதமரின் பயணம் முக்கியத்துவம் பெற்றது.
- ஐக்கிய அரபு அமீரக அதிபர் உடனான பேச்சுவார்த்தைக்குப் பிறகு இந்தியாவின் உத்திசார் பெட்ரோலிய கையிருப்பை விரிவுபடுத்துதல், நீண்ட கால எல்பிஜி விநியோகம், பாதுகாப்பு, கப்பல் போக்குவரத்து தொடர்பாக முக்கிய ஒப்பந்தங்கள் கையொப்பமாகின. இந்தியாவில் 5 பில்லியன் டாலர் முதலீடுகளை மேற்கொள்ளவும் ஐக்கிய அரபு அமீரகம் உறுதியளித்தது.

(iii) நெதர்லாந்து:

- இதைத்தொடர்ந்து, நெதர்லாந்துக்குப் பயணித்த பிரதமர் மோடி, அந்நாட்டின் பிரதமர் ரோப் ஜெட்டனுடன் விரிவான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். இருதரப்பு உறவுகள் உத்திசார் கூட்டுறவு அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டதுடன், முக்கியக் கனிமங்கள், செமிகண்டக்டர், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, இடப்பெயர்வு-போக்குவரத்து உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்தும் 17 ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன.

(iv) ஸ்வீடன்:

- ஸ்வீடன் பயணத்தின்போது, வர்த்தகம், தொழில்நுட்பம், பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை விரிவாக்குவது குறித்து அந்நாட்டு பிரதமர் உல்ஃப் கிறிஸ்டன்சனுடன் பிரதமர் மோடி விரிவாக விவாதித்தார். ஸ்வீடனின் உயரிய 'தி ராயல் ஆர்டர் ஆஃப் தி போலார் ஸ்டார், டிகிரி கமாண்டர் கிராண்ட் 'கிராஸ்' விருது பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டது.

(v) நார்வே:

- ஸ்வீடனில் இருந்து நார்வேக்கு பயணமான பிரதமர், பசுமை எரிசக்தி, வர்த்தகம், நிலையான வளர்ச்சி, நீலப் பொருளாதாரம், ஆர்டிக் ஆராய்ச்சி, எண்மமயமாக்கல் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டின் பிரதமர் ஜோனஸ் கர் ஸ்டோருடன் ஆலோசித்தார். இந்தியா-நார்டிக் நாடுகள் இடையிலான மூன்றாவது உச்சிமாநாட்டிலும் பங்கேற்றார். நார்வே நாட்டின் உயரிய 'தி கிராண்ட் கிராஸ் ஆஃப் தி ராயல் நார்வீ ஜியன் ஆர்டர் ஆஃப் மெரிட்' விருது பிரதமருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

(vi) இத்தாலி:

- தனது பயணத்தின் இறுதிக்கட்டமாக இத்தாலிக்கு சென்ற பிரதமர் மோடி, வர்த்தகம், முதலீடு, கலாசார தொடர்பு, செயற்கை நுண்ணறிவு, முக்கியக் கனிமங்கள், விண்வெளி மற்றும் அணுசக்தி துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டு பிரதமர் ஜார்ஜியா மெலோனியுடன் ஆலோசித்தார். இந்திய-இத்தாலி உறவுகள், சிறப்பு உத்திசார் கூட்டுறவு அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டது.
- உணவு பாதுகாப்பு, நிலையான வேளாண்மை, கிராமப்புற மேம்பாட்டுக்கான பிரதமர் மோடியின் சிறந்த பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், ஐ.நா. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (எஃப்ஏஓ) சார்பில் அக்ரிகோலா பதக்கம் ரோம் நகரில் அவருக்கு வழங்கப்பட்டது.

(vii) ஐந்து நாடுகள் பயணத்தின்போது, வெளிநாட்டுத் தலைவர்களுக்கு இந்தியப் பாரம்பரியத்தைப் பறைசாற்றும் பிரத்யேக பரிசுகளை பிரதமர் மோடி வழங்கி மகிழ்வித்தார்.

- இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனிக்கு அஸ்ஸாமின் தங்கப்பட்டு என்ற முகா பட்டு சால்வை மற்றும் மணிப்பூரில் புகழ்பெற்ற ஷிருய் லில்லி பட்டு சால்வை,
- இத்தாலி அதிபர் செர்ஜியோ மட்டரெல்லாவுக்கு புகழ்பெற்ற ஹிந்துஸ்தானி பாடகர் பண்டிட் பீம்சேன் ஜோஷி, கர்நாடக இசைப் பாடகி எம்.எஸ்.சுப்புலட்சுமியின் இசை குறுந்தகடுகள் அடங்கிய கலை வேலைபாடுகள் கொண்ட பளிங்குப் பெட்டி,
- நெதர்லாந்து பிரதமர் ரோப் ஜெட்டனுக்கு மீன் உருவம் கொண்ட மதுபனி ஓவியம்,
- நெதர்லாந்து மன்னர் வில்லியம் அலெக்ஸாண்டருக்கு ஜெய்பூரின் நீல மண்பாண்டம்,
- அரசி மேக்ஸிமாவுக்கு ராஜஸ் தானின் மீனாகரி-குந்தன் காதணிகள்,
- ஸ்வீடன் பிரதமர் உல்ஃப் கிறிஸ்டர்சனுக்கு லடாக்கின் தூய கம்பளி சால்வை,
- ஐக்கிய அரபு அமீரக அதிபர் ஷேக் முகமது பின் சையத் அல் நஹ்யானுக்கு 'மாம்பழங்களின் அரசி' என அறியப்படும் குஜராத் கேசர் மாம்பழங்கள் மற்றும் மேகாலய அன்னாசிப் பழங்கள்,
- நார்வே பிரதமர் ஜோனஸ் கர் ஸ்டோருக்கு உலர்த்தப்பட்ட ஆர்க்கிட் மலர் ஓவியம்,
- ஐ.நா. உணவு மற்றும் வேளாண் அமைப்பின் தலைமை இயக்குநர் க்யூ டோங்யூவுக்கு கேரள மாநிலம், பாலக்காட்டில் விளையும் சிவப்பு அரிசி உள்பட இந்திய பாரம்பரிய அரிசி ரகங்களை பிரதமர் மோடி பரிசளித்தார்.